தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com

www.dhinakani.com


நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :204 | 4 - பக்கம் | 20.02.2025 | வியாழன்கிழமை | விலை ரூ.6





**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.**

விளக்கம்:

மறந்தும்கூட மற்றவர்க்குக் கேடு செய்ய நினைக்கக் கூடாது; அப்படி நினைத்தால் அவனுக்குக் கேடு உண்டாக்க அவனை அறம் முற்றுகையிட்டு விடும்.

## டெல்லி முதல்வராக ரேகா குப்தா இன்று பதவியேற்பு: ராம்லீலா மைதானத்தில் பிரம்மாண்ட ஏற்பாடுகள்



புதுடெல்லி: டெல்லி முதல்வராக நேற்று தேர்வு செய்யப்பட்ட ரேகா குப்தா (50), இன்று பதவியேற்க உள்ளார். இதையொட்டி டெல்லி ராம்லீலா மைதானத்தில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. டெல்லி சட்டப்பேரவைக்கு கடந்த 5-ம் தேதி தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள 70 தொகுதிகளில் பாஜக 48 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க இருக்கிறது. இந்நிலையில், நேற்று டெல்லி முதல்வரை தேர்வு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் பிரதமர் மோடி வீட்டில் நடைபெற்றது. இதில் கட்சியின் மூத்த தலைவர்கள் பங்கேற்றனர். புதிய முதல்வரை தேர்வு செய்ய முன்னாள் மத்திய அமைச்சரும் பாஜக எம்.பி.யுமான ரவி சங்கர் பிரசாத், பாஜக தேசிய செயலாளர் ஓம் பிரகாஷ் தன்கட் ஆகியோர் மத்திய பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. கேஜ்ரிவாலை தோற்கடித்த பர்வேஷ் வர்மா, வீரேந்திர சச்தேவா, ரேகா குப்தா, விஜேந்தர் குப்தா, சதீஷ் உபாத்யாயா, அஜய் மஹாவர் ஆகியோரது பெயர்கள் முதல்வர் பதவிக்கு அடிபட்டன. அதேநேரம் டெல்லிக்கு பெண் ஒருவரை முதல்வராக தேர்வு செய்ய வேண்டும் என்ற பரிந்துரை முழுமையாக பரிசீலிக்கப்பட்டது. இந்த நிலையில்தான் நேற்று மாலை 7 மணியளவில் டெல்லி பாஜக எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர் பதவிக்கு ரேகா குப்தா ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து இன்று ராம் லீலா மைதானத்தில் நடைபெறவுள்ள விழாவில் முதல்வராக ரேகா குப்தா பதவியேற்பார். காலை 11 மணிக்கு பதவியேற்பு விழா தொடங்கும். முதல்வருக்கு, டெல்லி துணைநிலை ஆளுநர் வி.கே. சக்சேனா பதவி பிரமாணத்தையும், ரகசிய காப்பு பிரமாணத்தையும் செய்து வைக்கவுள்ளார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடியுடன், மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர். பாஜக ஆளும் 21 மாநிலங்களின் முதல்வர்களும், துணை முதல்வர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்றனர்.

## கூடுதல் டிக்கெட் விற்பனை செய்தது ஏன்? - டெல்லி ரயில் நிலைய கூட்ட நெரிசல் தொடர்பாக ரயில்வேக்கு நீதிமன்றம் கேள்வி



டெல்லி ரயில் நிலைய கூட்ட நெரிசல் தொடர்பான வழக்கில், கூடுதல் டிக்கெட் விற்பனை செய்தது ஏன்? என டெல்லி உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. டெல்லி ரயில் நிலையத்தில் கடந்த வாரம் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 18 பேர் உயிரிழந்தனர். பிரயாக்ராஜ் வழியாக செல்லும் இரு ரயில்களில், மகா கும்பமேளாவுக்கு செல்லும் பக்தர்கள் ஏற முயன்றபோது இந்த கூட்ட நெரிசல் ஏற்பட்டது. அப்போது 2 மணி நேரத்தில் 3,000-க்கும் மேற்பட்ட பயண சீட்டுகள் டெல்லி ரயில் நிலையத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது போன்ற சோக சம்பவங்களை தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ரயில்வே சட்டத்தை மீறும் பயணிகளுக்கு விதிமுறைகள் படி ரூ.1,000 அபராதம் மற்றும் 6 மாத சிறை தண்டனை விதிப்பதை கட்டாயம் ஆக்க வேண்டும் என உத்தரவிடக்கோரி டெல்லி உயர்நீதிமன்றத்தில் ஒருவர் பொது நல மனு தாக்கல் செய்தார். இந்த மனு தலைமை நீதிபதி உபாத்யாய் மற்றும் நீதிபதி துஷர் ராவ் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ரயிலில் பயணம் செய்யக்கூடிய பயணிகளின் எண்ணிக்கையைவிட கூடுதலாக பயணச்சீட்டுகளை ரயில்வேத்துறை தொடர்ந்து விற்பனை செய்தது ஏன்? என மத்திய அரசும், ரயில்வேதுறையும் விளக்கம் அளிக்க வேண்டும் என நீதிபதிகள் கூறினர். இதற்கு ரயில்வே சார்பில் பதில் அளித்த சொலிசிடர் ஜெனரல் துஷர் மேத்தா, ‘‘அனைத்து அம்சங்களையும், ரயில்வேதுறை பரிசீலிக்கும் என்றும், நீதிமன்ற உத்தரவை ஏற்பதாகவும் கூறினார். இதையடுத்து இந்த வழக்கு விசாரணை அடுத்த மாதம் 26-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களில் 90% நிறைவேற்றம் சென்னை குடியிருப்பு ஒதுக்கீட்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின்



சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியிருப்பு ஒதுக்கீட்டுக்கான ஆணையை பயனாளிக்கு வழங்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின். தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்களில் 90 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தெரிவித்தார். சென்னை டிக்காஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்சார்பில் சந்திரயோகி சமாதி, ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 712 குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது: சட்டப்பேரவையில் வடசென்னை பகுதிக்காக ரூ.1,000 கோடி ஒதுக்கி வடசென்னை வளர்ச்சித் திட்டத்தை அறிவித்தேன். இப்போது ரூ.6,400 கோடியாக உயர்த்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல், நகர்புற வாழ்விட மேலாண்மை வாரியம் சார்பில், ரூ.5,059 கோடி மதிப்பில் 23 மாவட்டங்களில் 44,609 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. வடசென்னை பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்கள் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருக்க வேண்டும் என்பதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள் 100-க்கு 90 சதவீதத்துக்கு மேல் நிறைவேற்றியுள்ளோம். தேர்தல் நேரத்தில் அறிவிக்காத திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. புதுமைப் பெண் திட்டம் தேர்தல் வாக்குறுதிகளில் வழங்கப்படவில்லை. பள்ளிப்படிப்பை முடித்த பிறகு கல்லூரிக்கு செல்லும்போது மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று அறிவித்து வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், தமிழ் புதல்வன் திட்டத்தை உருவாக்கி மாணவர்களுக்கும் மாதம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. மேலும், நம்முடைய வீட்டுக் குழந்தைகள் பள்ளிக்கு செல்கின்றபோது நாம் உணவை கொடுக்காமல் அனுப்பி வைக்கிறோமே என்ற ஏக்கத்தில் இருந்த பெற்றோர், மகிழ்ச்சியடையும் வகையில் குழந்தைகள் பள்ளிக்கு வந்தவுடன் காலை உணவு வழங்கி வருகிறோம். இவை எல்லாம் தேர்தல் வாக்குறுதிகளில் இல்லை. இல்லாத வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியின் சார்பில்தான் இன்று இப்பகுதி மக்களுக்கு வீடுகளை உருவாக்கித்தந்து அதற்கு தேவையான சலுகைகளை, நீங்கள் எந்த அளவுக்கு எதிர்பார்த்தீர்களோ, அதைவிட அதிகமான சலுகைகளை இந்த அரசு உங்களுக்கு வழங்கியுள்ளது. இதை நீங்கள் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த ஆட்சிக்கு நீங்கள் என்றைக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., எம்எல்ஏக்கள் தாயகம் கவி, இ.பரந்தாமன், அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதித் துறை செயலர் காகர்லா உஷா, சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ். பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சிலிண்டர் பைப் கசிவால் டீக்கடையில் தீ விபத்து.

குன்னூர் அருகே உள்ள



பெட்ஃபோர்டு பகுதியில் 18.02.2025 அன்று மதியம் 4.00 மணி அளவில் டீக்கடை ஒன்றில் சிலிண்டர் பைபிள் எரிவாயு கசிவு ஏற்பட்டதால் கடை எரிந்து கடையில் இருந்த பொருட்கள் முழுவதும் சேதமடைந்தது அதிர்ஷ்டவசமாக அசம்பாவிதம் எதுவும் நடைபெறாத நிலையில் கடையில் இருந்த மூதாட்டி ஒருவருக்கு மட்டும் தீக்காயம் ஏற்பட்டது இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே பெட் ஃபோர்டு பகுதியில் ஹரிஷ் என்பவர் சிறிய டீக்கடை நடத்தி வருகிறார் கடையில் திடீரென சிலிண்டர் பைபிள் வெடித்து எரிவாயு கசிவு ஏற்பட்டு தீப்பிடிக்க ஆரம்பித்தது சிறிய கடையில் நான்கு பேர் இருந்ததால் என்ன செய்வது என்று யோசிப்பதற்கு முன் தீ மலமலவென கடை முழுவதும் தீ பரவியது சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தபோது கடையில் இருந்தவர்கள் வெளியில் ஓடி வர ஹரிசின் தயார் லட்சுமி வயது 65 இவர் புடவையில் தீப்பற்றி எரிய அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தண்ணீர் ஊற்றி தீயை அனைத்தனர் தீயணைப்புத் துறையினர் வருவதற்கு முன் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தீயை முழுவதும் அனைத்தானர். இதில் மூதாட்டி லட்சுமி என்பவருக்கு 20% தீக்காயம் ஏற்பட்டு குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக உதகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார் இந்த




குன்னூர் அருகே உள்ள பெட்ஃபோர்டு பகுதியில் 18.02.2025 அன்று மதியம் 4.00 மணி அளவில் டீக்கடை ஒன்றில் சிலிண்டர் பைபிள் எரிவாயு கசிவு ஏற்பட்டதால் கடை எரிந்து கடையில் இருந்த பொருட்கள் முழுவதும் சேதமடைந்தது அதிர்ஷ்டவசமாக அசம்பாவிதம் எதுவும் நடைபெறாத நிலையில் கடையில் இருந்த மூதாட்டி ஒருவருக்கு மட்டும் தீக்காயம் ஏற்பட்டது இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பாக காணப்பட்டது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே பெட் ஃபோர்டு பகுதியில் ஹரிஷ் என்பவர் சிறிய டீக்கடை நடத்தி வருகிறார் கடையில் திடீரென சிலிண்டர் பைபிள் வெடித்து எரிவாயு கசிவு ஏற்பட்டு தீப்பிடிக்க ஆரம்பித்தது சிறிய கடையில் நான்கு பேர் இருந்ததால் என்ன செய்வது என்று யோசிப்பதற்கு முன் தீ மலமலவென கடை முழுவதும் தீ பரவியது சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து பார்த்தபோது கடையில் இருந்தவர்கள் வெளியில் ஓடி வர ஹரிசின் தயார் லட்சுமி வயது 65 இவர் புடவையில் தீப்பற்றி எரிய அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தண்ணீர் ஊற்றி தீயை அனைத்தனர்தீயணைப்புத் துறையினர் வருவதற்கு முன் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தீயை முழுவதும் அனைத்தானர். இதில் மூதாட்டி லட்சுமி என்பவருக்கு 20% தீக்காயம் ஏற்பட்டு குன்னூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக உதகை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார் இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

## விவசாயியை தாக்கிய எஸ்ஐ-க்கு ரூ.50 ஆயிரம் அபராதம் விதிப்பு: மனித உரிமைகள் ஆணையம் உத்தரவு

திருநெல்வேலி மாவட்டம் மடத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கஸ்பார் வில்லியம், தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: கடந்த 2018-ம் ஆண்டு செப்.23-ம் தேதி எங்களது விவசாய நிலத்தை சேதப்படுத்தி, தனியார் காற்றாலை நிறுவனம் ஒன்று பாதை போட்டிருந்தது. இதை எங்கள் கிராமத்தை சேர்ந்த செல்வராஜ் மற்றும் அவரது மகன் ஞானப்பிரகாசம் உதவியோடு அந்நிறுவனம் செய்த நிலையில், இதுதொடர்பாக சீவலப்பேரி காவல் நிலையத்தில் புகாரளித்தேன். 3 மாத காலமாக எந்த நடவடிக்கையும் இல்லாததால், இரண்டு முறை காவல் கண்காணிப்பாளரிடமும் புகாரளித்தேன். பின்னர், ஆய்வாளர் அழைத்ததன்பேரில் காவல் நிலையம் செல்லும் வழியில் நின்றிருந்த உதவி ஆய்வாளர், கண்காணிப்பாளரிடம் புகாரளித்ததை குறிப்பிட்டு என்னை மிரட்டினார். காற்றாலை இயந்திரங்களை கொண்டு செல்லும் லாரியை வழிமறித்து தகராறு செய்ததாக பொய்ப் புகார் பெற்று, காவல் நிலையத்துக்கு வரவழைத்து உதவி ஆய்வாளர் சுதன் என்னை கடுமையாக தாக்கினார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது. மனுவை விசாரித்த ஆணைய உறுப்பினர் வி.கண்ணதாசன், மனுதாரருக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீட்டை ஒரு மாதத்துக்குள் தமிழக அரசு வழங்கிவிட்டு, அந்தத் தொகையை உதவி ஆய்வாளரிடம் வசூலித்துக் கொள்ளலாம் என உத்தரவில் பரிந்துரைத்துள்ளார்.

# மேட்டூர் அருகே புதுச்சாம்பள்ளியில் சுரங்கப்பாதை அமைப்பது குறித்து ரயில்வே துறை அதிகாரிகளுடன் எஸ். சதாசிவம் எம்.எல்.ஏ, ஆய்வு

சேலம், பிப்.20

சேலம்மேற்குமாவட்ட பாமக செயலாளரும் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் S.சதாசிவம் எம்.ஏ எம்.எல்.ஏ அவர்கள் கடந்த 14.02.2025 அன்று டெல்லியில் மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களை நேரில் சந்தித்து பல்வேறு புதிய ரயில்வே திட்டங்கள் நிறைவேற்றி தர வேண்டும் என்று கோரிக்கை மனுவை வழங்கினார்.குறிப்பாக வீரக்கல் புதூர் பேரூராட்சி , புதுசாம்பள்ளி பகுதியில் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் மற்றும் ராமநகர் பகுதியில் புதிய ரயில்வே நிறுத்தம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை மனுவில் குறிப்பிட்டிருந்தார் இதனை தொடர்ந்து 17.02.2025 திங்கட்கிழமை சேலம்



கோட்ட ரயில்வே மேலாளர் திரு.பங்கஜ் குமார் சிங் சின்ஹா அவர்களை நேரில் சந்தித்து மத்திய ரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு வழங்கிய கோரிக்கை மனுவின் நகலை வழங்கினார். அதனை பெற்றுக் கொண்ட சேலம் கோட்டை ரயில்வே மேலாளர் இன்று மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் எம்.எல்.ஏ ஆகியோர் புதுச்சாம்பள்ளி பகுதியில் ரயில்வே சுரங்க பாதை அமைக்க மற்றும் ராமநகர் பகுதியில் புதிய நிறுத்தம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வுக்குப் பிறகு ஜீவா நகர் பகுதியில் விரைந்து ரயில்வே சுரங்கப்பாதை அமைக்கப்படும் என்று ரயில்வே துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ராமநகர் பகுதியில் ரயில் நிறுத்தம் அமைப்பது குறித்தும் , சேலம் மேட்டூர் இடையே காலை மற்றும் மாலை வேலைகளில் பயணிகள் ரயிலை இயக்குவதற்கான அனுமதி குறித்து இந்திய ரயில்வே துறைக்கு பரிந்துரை செய்வதாகும் தெரிவித்தனர். இந்த ஆய்வின்போது கூடுதல் ரயில்வே கோட்ட மேலாளர் சிவலிங்கம், முதன்மை கோட்ட பொறியாளர் கார்த்திகேயன் , முதன்மை வணிக கோட்ட மேலாளர் பூபதி ராஜா, கோட்ட இயக்கவியல் மேலாளர் சரவணகுமார், கோட்ட ரயில்வே மேலாளரின் நேர்முக உதவியாளர் திருமதி உஷா,

பி.என்.பட்டி பேரூராட்சி செயலாளர் லுத்தின் குமார், பாட்டாளி மக்கள் கட்சி பொறுப்பாளர்கள் டி.சி.எம்.கோபால் தமிழ்வாணன் எஸ்.கே. மோகன்,மணல் வெங்கடாசலம் வீரக்கல்புதூர் பேரூராட்சி செயலாளர் சுரேஷ்குமார், சாம்பள்ளி முருகன், கூபா கதிரவன் ,மகளிர் அணி பொறுப்பாளர்கள் ரேவதி, பாமக தொழிற்சங்க பொறுப்பாளர் செல்லப்பன், தெத்திகிரிபட்டி கோபால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வேலூர் அடுக்கம்பாறை ஆஸ்பத்திரியில் இருந்து தப்பி ஓடிய கைதி சிக்கினார் 4 போலீசார் சஸ்பெண்டு

வேலூர், பிப்.20

கேரளா மாநிலத்தை சேர்ந்தவர் பாபு ஷேக். இவர்காட்பாடியில் நடந்த கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றார். கடந்த 2023ம் ஆண்டு முதல் வேலூர் ஜெயிலில் தண்டனை அனுபவித்து வந்தார்.

அவருக்கு குடலிறக்க அறுவை சிகிச்சை செய்வதற்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். போலீஸ் பாதுகாப்புடன்



சிகிச்சை பெற்று வந்தார். நேற்று அதிகாலை 5 மணி அளவில் பாபு ஷேக் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிச் ஓடி விட்டார். தப்பிச் சென்ற பாபு ஷேக்கை போலீசார் பல்வேறு இடங்களில் தேடி வந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை வேலூர் அடுத்தசித்தேரிரெயில்வே தண்டவாளம் அருகே உள்ள செங்கல் சூளை புதரில் பதுங்கி இருந்த பாபு ஷேக்கை போலீசார் கைது செய்தனர்.

ஆஸ்பத்திரியில் இருந்து கைதி தப்பிச் சென்ற சம்பவத்தில் பணியில் கவனக் குறைவாக இருந்ததாக 4 ஆயுதப்படை போலீசாரை போலீஸ் சூப்பிரண்டு மதிவாணன் சஸ்பெண்டு செய்து உத்தரவிட்டார்.

# மீன்பிடி வலை திருட்டு: கொலை மிரட்டல் விடுத்த குற்றவாளி கைது

மேட்டூர், பிப்.20

மேட்டூர்: காவேரி ஆற்றின் மூலக்காடு பரிசல் துறை பகுதியில் மீனவரின் விலை உயர்ந்த மீன்பிடி வலை திருடப்பட்டதோடு, அவருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குள்ளவீரன்பட்டியைச் சேர்ந்த சக்திவேல் (62), கடந்த 18.01.2025 அன்று, ₹24,000 மதிப்புள்ள 12 கிலோ எடையுடைய மீன்பிடி வலைகளை மூலக்காடு அருகே காவிரி ஆற்றில் பரிசலில் வைத்து விட்டு சென்றுள்ளார். மீண்டும் மீன் பிடிக்கச் சென்றபோது, வலைகள் காணாமல் போனதை கவனித்துள்ளார்.

இந்தநிலையில், அச்சங்காடு வழியாக செல்லும் போது, மேட்டூர்குள்ள வீரன்பட்டியைச் சேர்ந்த ராமன் மகன் கார்த்திக், தனது இருசக்கர வாகனத்தில் மேற்படி வலைகளை எடுத்துச் செல்வதை சக்திவேல் கண்டுள்ளார். இது குறித்து கேட்டபோது, கார்த்திக் அவதூறாக திட்டி, கொலை மிரட்டல் விடுத்து, வலைகளுடன் தப்பிச் சென்றதாக கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையின் நடவடிக்கை



கொளத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உதவி ஆய்வாளர் மணிமாறன் வழக்கு பதிவு செய்து, கார்த்திக் மீது திருட்டு மற்றும் கொலை மிரட்டல் குற்றச்சாட்டில் அவரை கைது செய்து, திருடப்பட்ட மீன்பிடி வலைகளை மீட்டு, நீதிமன்றத்தில் முறையாக முற்படுத்தி, தற்போது ஓமலூர் கிளைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மேலும், கைதான கார்த்திக் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு கருமலைக் கூடல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தெர்மல் பகுதியில் செயின் பறிப்பு வழக்கில் தொடர்புடையதாக இருந்து சிறையில் இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட முதல்வர் மருந்தகங்கள் முன்னேற்பாடு பணிகள்: மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, பிப்.20

கன்னியாகுமரிமாவட்டகூட்டுறவுதுறைசார்பில்; நாகர்கோவில்மாநகராட்சிக்குட்பட்டவாத்தியார்விளை, கிருஷ்ணன்கோவில், வெள்ளிகோடுஆகியமுதல்வர்மருந்தகங்களைமாவட்டஆட்சித்தலைவர்திருமதி.ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள்நேரில்பார்வையிட்டுஆய்வுமேற்கொண்டுதெரிவிக்கையில்

மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர்அவர்கள் பொதுப்பெயர் (ஜெனரிக்) மருந்துகளையும்பிறமருந்துகளையும்குறைந்தவிலையில்பொதுமக்களுக்குகிடைக்கசெய்யும்வகையில்தமிழ்நாடுமுழுவதும் முதற்கட்டமாக 1000 முதல்வர்மருந்தகங்கள்அமைக்கப்படும்எனஅறிவித்தார்கள். இத்திட்டத்தின்கீழ்முதல்வர்மருந்தகங்கள்செயல்படுத்தப்படும்நேர்வில்தொழில்முனைவோர்கள்மருந்தாளுநர்களுக்கு ரூ.3 இலட்சம்அரசுமானியமாகவழங்கப்படுகிறது.கூட்டுறவுச்சங்கங்களுக்குஅரசுமானியத்தொகையாக ரூ.2 இலட்சம்வழங்கப்படுகிறது.அதில் 50 சதவீதம் உட்கட்டமைப்புவசதிக்கும், 50 சதவீதம்மருந்துகளாகவும்வழங்கப்படுகிறது.



அதனடிப்படையில்அகஸ்தீஸ்வரம்வட்டாரத்திற்குட்பட்டதேரேக்கால்புதூர்ஊராட்சிசடையன்குளம், வடசேரிகிருஷ்ணன்கோயில், கோட்டார்இளங்கடை, தேரடிவீதிவடசேரி, வாத்தியார்வி ளைகிருஷ்ணன் கோயில், வடசேரிபஸ்நிலையம், பள்ளிவிளைரோடுவெட்டூர்ணிமடம்ஆகியஏழுஇடங்களிலும்தோவாளை வட்டாரத்திற்குட்பட்ட வெள்ளமடம், பாலமோர்ரோ டுதிட்டுவிளை, ஆரல்வாய்மொழிதொடக்கவேளாண்மைகடன்சங்கம், வீரமார்த்தா ண்டன்புதூர்ஆகியநான்குஇடங்களிலும், இராஜாக்கமங்கலம்வட்டாராத்துக்குட்பட்டமுகிலன்விளைதொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கம், ஈத்தாமொழிதொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன் சங்கம், மேலச்சங்கரன் குழி, இராஜாக்கமங்கலம்சாலைபுன்னைநகர், தெங்கம்புதூர்நாகர்கோவில், அரியபெருமாள்விளைபுத்தளம்ஆகியஆறு இடங்களிலும், குருந்தன்கோடுவட்டாரத்திற்குட்பட்டமெயின்ரோடுவீராணி, தருவைமணவாளக்குறிச்சிஆகியஇரண்டுஇடங்களிலும்தக்கலைவட்டாரத்துக்குட்பட்டவெள்ளிகோடுதொடக்கவேளாண்மைகூட்டுறவுகடன்சங்கம், மாஞ்சாலும்மூடுஆகியஏழுஇடங்கள்எனமொத்தம் 36 இடங்களில்முதல்வர் மருந்தகம்அமைக்கப்பட்டுவருகிறது.

அதன்ஒருபகுதியாகநாகர்கோவில்மாநகராட்சிக்குட்பட்டகிருஷ்ணன்கோவில,; வாத்தியார்விளை, தக்கலைவட்டாரத்துக்குட்பட்டவெள்ளிகோடு தொடக்கவேளாண்மை கூட்டுறவுகடன்சங்கத்தின் கீழ்அமைக்கப்பட்டுவரும்முதல்வர்மருந்தகத்தினைநேரில்பார்வையிட்டு ஆய்வுமேற்கொள்ளப்பட்டதோடு, பணிகளின்நிலைகள்குறித்துதுறைசார்ந்தஅலுவலர்களிடம்கேட்டறியப்பட்டது.

மார்த்தாண்டம்பம்பம் பகுதியில்அமைந்துள்ள கல்குளம் விளவங்கோடுவேளாண்உ ற்பத்தியாளர்கூட்டுறவுவிற்பனைசங்கவளாகத்தில்அமைந்துள்ளமுதல்வர்மருந்தகசேமிப்புகிடங்கினைநேரில்பார்வையிட்டுஆய்வுமேற்கொள்ளப்பட்டது. மருந்துபொருட்களின்இருப்புகள்குறித்துதுறைஅலுவலர்களிடம்கேட்டறியப்பட்டது. மேலும்முதல்வர்மருந்தகம்திறப்புவிழாவினை முன்னிட்டுமாவட்டத்திற்குட்பட்ட 36 முதல்வர்மருந்தகத்திற்கும்தேவையானமருந்துகள், மாத்திரைகள்உள்ளிட்டவைகளைவழங்கியதுகுறித்துஉறுதிசெய்திடதுறைஅலுவலர்களுக்குஅறிவுறுத்தப்பட்டது. இவ்வாறுமாவட்டஆட்சித்தலைவர்திருமதி.ஆர். அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள்தெரிவித்தார்கள்.

# சங்கரன்கோவிலில் தீவிபத்து: தீப்பெட்டி தொழிற்சாலைக்கு `சீல்' தாசில்தார் நடவடிக்கை

சங்கரன்கோவில், பிப்.20

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் புது மனை 4வது தெருவில் நந்தகுமார் என்பவருக்கு சொந்தமான தீப்பெட்டி தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் மருந்து தடவிய தீக்குச்சிகள்அங்குள்ளகுடோனில் வைக்கப்பட்டிருந்தது. நேற்று காலை தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருந்த நிலையில், திடீரென்று தீப்பிடித்து எரிந்தது.

இதனால் அங்கு வேலை செய்துகொண்டிருந்த 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பதறியடித்து அங்குள்ள பல்வேறு பாதை வழியாக அங்கிருந்து வெளியேறினர்.

இது தொடர்பாக சங்கரன்கோவில் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல்



தெரிவிக்கப்பட்டது. உடனே தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

தீ மேலும் கொழுந்து விட்டு எரிந்ததால் கட்டிடத்தின் ஒரு பகுதி சுவரை இடித்து, அதன் வழியாக தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயணைப்பு வீரர்கள்தீயை அணைத்தனர். விபத்தின் போது தொழிலாளர்கள் உடனே வெளியேறியதால் பெரும் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த விபத்தில் சுமார் ரூ.4 லட்சம் மதிப்பிலான தீக்குச்சி மூடைகள் எரிந்து சாம்பலானது. விபத்து குறித்து சங்கரன்கோவில் கோட்டாட்சியர் கவிதா உள்ளிட்ட அதிகாரிகள் தொழிற்சாலைக்கு நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

தொடர்ந்து அவர் தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று விசாரணை நடத்தினார். அப்போது தீப்பெட்டி தொழிற்சாலை உரிய அனுமதியின்றி செயல்பட்டதும், அங்கு பாதுகாப்பு உபகரணங்கள் செயல்படாமல் இருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து தீப்பெட்டி தொழிற்சாலைக்கு சங்கரன்கோவில் தாசில்தார் தலைமையிலான குழுவினர் சீல் வைத்தனர்.

இதனிடையே தகவல் அறிந்து அங்கு ராஜா எம்.எல்.ஏ, முன்னாள் அமைச்சர் ராஜலெட்சுமி, சங்கரன்கோவில் நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, நகர் மன்ற துணைத்தலைவர் கண்ணன் என்ற ராஜூ ஆகியோர் விரைந்து சென்று அங்கிருந்த தொழிலாளர்களை சந்தித்து ஆறுதல் கூறினர். மேலும் இச்சம்பவம் தொடர்பாக சங்கரன்கோவில் டவுன் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# உத்தர பிரதேசம்: சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட மகா கும்பமேளா புனித நீரில் கைதிகள் குளியல்

லக்னோ, பிப்.20

உலகின் மிகப்பெரிய ஆன்மிக சங்கமமாக மகா கும்பமேளா திகழ்கிறது. உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் மகா கும்பமேளா நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. உலகம் முழுவதும் உள்ள

இந்து மதத்தினர் பிரயாக்ராஜில் திரண்டு அங்குள்ள உள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இந்நிலையில், உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள



உன்னாவ் மாவட்ட சிறைச்சாலை நிர்வாகத்தினர், மகா கும்பமேளாவில் சிறை கைதிகளும் புனித நீராடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இதன்படி மகா கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புனித நீர் சிறை வளாகத்திற்குள் உள்ள ஒரு தொட்டியில் நிரப்பப்பட்டது. அந்த நீரில் சிறைக் கைதிகள் குளித்து மகிழ்ந்தனர். மகா கும்பமேளாவில் தாங்களும் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கிய சிறை நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிப்பதாக அவர்கள் கூறினர்.

# பருப்பு, பாமாயிலுக்கு டெண்டர் கோரியது தமிழக அரசு

சென்னை, பிப்.20

தமிழ்நாட்டில் 2 கோடியே 21 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இவர்களில் 1 கோடியே 90 லட்சம் குடும்ப அட்டைதாரர்கள் மாதம் தோறும் ரேசன் கடைகளில் துவரம் பருப்பு, சமையல் எண்ணெயை (பாமாயில்) மிக குறைந்த விலையில் பெற்று வருகிறார்கள்.

ஏழை எளியவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழக அரசு துவரம் பருப்பு, பாமாயிலை வெளி சந்தையில் அதிக விலைக்கு கொள்முதல் செய்து அவற்றை குறைந்த மானிய விலையில் வழங்கி வருகிறது.

இந்த நிலையில், நியாய விலைக்கடைகளுக்கு தேவையான துவரம் பருப்பு, பாமாயிலை கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது. நியாய விலைக்கடைகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி பருப்பு, பாமாயில் கிடைக்கும் வகையில் இருப்பு வைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களுக்கு தேவையான 6 கோடி பாமாயில் பாக்கெட், 60 ஆயிரம் மெட்ரிக் டன் துவரம் பருப்பு கொள்முதல் செய்ய டெண்டர் கோரப்பட்டுள்ளது.

# திரிவேணி சங்கம தண்ணீர் குளிப்பதற்கு தகுதியற்றது: தேசிய பசுமை தீர்ப்பாயம் அதிர்ச்சி தகவல்

பிரயாக்ராஜ், பிப்.20

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா கும்பமேளா கடந்த மாதம் 13ம் தேதி தொடங்கியது. இதில், நாள்தோறும் கோடிக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று, 3 நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். இது வரை 55 கோடி பேர் புனித நீராடியுள்ளதாக அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

வரும் 26ம் தேதி வரை 45 நாட்களுக்கு இந்த நிகழ்ச்சி நடைபெறஉள்ளது.எனவே இன்னும் பலர் புனித நீராட வருவார்கள் என்று எதிர் பார்ப்பதால், 55 கோடி என்ற எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இந்தநிலையில் தேசிய மாசுக்கட்டுப்பாட்டு வாரி



யம், பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமம் மற்றும் கும்பமேளா பக்தர்கள் நீராடும் பல்வேறு படித்துறைகளில் உள்ள தண்ணீரை எடுத்து ஆய்வுக்கு அனுப்பினர். அந்த ஆய்வின் அடிப்படையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் கடந்த 3ந்தேதி தேசிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், பிரயாக்ராஜில் உள்ள திரிவேணி சங்கமம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் பக்தர்கள் நீராடுவதால், மனிதக் கழிவுகள் அதிகம் கலந்துள்ளது. இதனால் கோலி பார்ம் (எப்.சி.) என்ற நுண்ணுயிரி அதிக அளவில் கலந்துள்ளது. இதனால் அந்த தண்ணீர் மனிதர்கள் குளிப்பதற்கு உகந்த தரத்தில் இல்லை. இது கவலைக்குரியது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு அறிக்கையில்அடிப்படையில்தேசிய பசுமை தீர்ப்பாயம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மகா கும்பமேளா நடைபெறும் திரிவேணி சங்கமம் மற்றும் பிற படித்துறைகளில் அதிகமானோர்நீராடுவதால் மனிதக் கழிவுகள் கலப்பதால், கோலி பார்ம் பாக்டீரியாக்கள் உள்ளது ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதனால் திரிவேணி சங்கம தண்ணீர் மனிதர்கள் குளிப்பதற்கு தகுதியற்றதாக உள்ளது என்ற அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இந்த அறிக்கையை ஆய்வு செய்து பதிலளிக்கும்படி உத்தரப்பிரதேச அரசுக்கு தேசிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டுள்ளது.

# கன்னியாகுமரியில் 'திடீர்' கடல் சீற்றம் ராட்சத அலைகள் எழுந்ததால் சுற்றுலா பயணிகள் அச்சம்

கன்னியாகுமரி. பிப்.20

கன்னியாகுமரி கடலில் சுனாமிக்கு பிறகு அடிக்கடி பல இயற்கை மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. இன்று காலை "திடீர்" என்று பயங்கர கடல் சீற்றம் ஏற்ப ட்டது.

இந்திய பெருங்கடல், வங்ககடல், அரபிக்கடல் ஆகிய 3 கடல்களும் கொந்தளிப்பாக காணப்பட்டது. சுமார் 10 முதல் 15 அடி உயரத்துக்கு ராட்சத அலைகள் ஆக்ரோஷமாக எழும்பி வீசின. நடுக்கடலில் இருந்து பொங்கி எழுந்து வந்த ராட்சத அலைகள் கரையை தொட்டு சென்றன.

மேலும் அவை கரையில் உள்ள பாறைகளில் முட்டி மோதி சிதறிய காட்சி சுற்றுலா பயணிகளிடம் அச்சத்தை ஏற்படுத்தியது. அவர்கள் அவசர அவசரமாக கடற்கரையில் இருந்து பாதுகாப்



பான இடம் நோக்கி சென்றனர்.ஆபத்தைஅறியாமல் சிலர் கடலில் குளித்துக் கொண்டிருந்தனர். அவர்களை போலீசார் அங்கிருந்து வெளியேற்றினர். இதனால் எப்போதும் பரபரப்பாக காணப்படும் முக்கடல் சங்கமம் கடற்கரை பகுதி சுற்றுலா பயணிகளின்றி வெறிச்சோடி கிடந்தது. சுற்றுலா போலீசாரும் கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும் கடற்கரை பகுதியில் ரோந்து சுற்றி கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

## தாராபுரம் நகராட்சியில் இணைப்புக்கு எதிர்ப்பு பொதுமக்கள் ஊர்வலம், மனு வழங்கல்




திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில், கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்தை, தாராபுரம் நகராட்சியுடன் இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தாராபுரம் பேருந்து நிலையத்திலிருந்து கோட்டாட்சியர் அலுவலகம் வரை கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்தை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள், ஊர்வலமாக வந்து தமிழ் நாடு முதலமைச்சரின் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொள்ள வந்த மாவட் ஆட்சியர் கிருஸ்துராஜிடம் மனு அளித்தனர். மேலும் கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்து தாராபுரம் ஒன்றிய பகுதியாகவே செயல் பட விரும்புவதாக பொதுமக்கள், தெரிவித்தனர். இந்நிகழ்ச்சி குறித்து பொதுமக்கள் கூறுகையில், கவுண்டச்சி புதூர் பஞ்சாயத்து மற்றும் நஞ்சியம் பாளையம் பகுதியை சேர்ந்த மக்கள் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகின்றனர். கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்தை தாராபுரம் நகராச்சியுடன் இணைத்தால் 100 நாள் வேலை கிடைக்காது. மேலும் வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர் வரி என அணைத்து வரியும் உயர்ந்தது விடும். மேலும் புதிதாக வீடு கட்ட, பழைய வீட்டை பராமரிக்க அரசு வழங்கும் சலுகைகள் எதுவும் கிடைக்காது. கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்தை தாராபுரம் நகராச்சியுடன் இணைத்தால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாவார்கள் எனவே கவுண்டச்சி புதூர் மற்றும் நஞ்சியம் பாளையம் பஞ்சாயத்தை தாராபுரம் நகராச்சியுடன் இணைக்க வேண்டாம் என திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

## உங்கள் ஊரில் உங்களை தேடி திட்டத்தின் கீழ்



மதுரை வடக்கு வட்டம், சமயநல்லூரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பாக நடைபெற்ற விவசாயிகளின் நில உடமைப் பதிவுகள் சரிபார்த்தல் முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ. சங்கீதா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) திருமதி.வைஷ்ணவி பால், இ.ஆ.ப., அவர்கள் உள்ளார்.

## தங்கம் விலை மீண்டும் பவுன் ரூ.64,000-ஐ கடந்தது!



சென்னை: தங்கம் விலை பவுனுக்கு ரூ.520 அதிகரித்து மீண்டும் ஒரு பவுன் ரூ,64,000-ஐ கடந்து விற்பனையாகிறது. சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் விற்பனையாகி வருகிறது. இதன்படி, தங்கம் இன்று (பிப்.19) கிராமுக்கு ரூ.65 அதிகரித்து ஒரு கிராம் ரூ.8,035-க்கும், பவுனுக்கு ரூ.520 அதிகரித்து ரூ.64,280-க்கு -க்கும் விற்பனையாகி வருகிறது. வெள்ளியின் விலை மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.108-க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ பார் வெள்ளியின் விலை ரூ.1,08,000 ஆக உள்ளது. கடந்த 11-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.64,480 ஆக அதிகரித்து புதிய உச்சத்தை அடைந்தது. பின்னர், கடந்த 15-ம் தேதி பவுனுக்கு ரூ.800 குறைந்தது. இந்நிலையில், மீண்டும் ஒரு பவுன் ரூ,64,000-ஐ கடந்து விற்பனையாகிறது.

## மருத்துவக் கல்லூரி உரிமையை மாநில அரசுக்கு கொடுக்க வேண்டும் சீமான்



விக்கிரவாண்டி, பிப்.20

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத் தேர்தலானது கடந்த 2019 ம் ஆண்டு நடைபெற்ற போது கஞ்சனூர் அருகேயுள்ள நேமூர் கிராமத்தில் நடைபெற்ற நாம் தமிழர் கட்சியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக சீமான் மீது காங்கிரஸ் கட்சி நிர்வாகி ரமேஷ் கஞ்சனூர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.

அந்த புகாரின் பேரில் இவ்வழக்கு விசாரணை விக்கிரவாண்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் கடந்த முறை சீமான் ஆஜராகாததால் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இதனையடுத்து இவ்வழக்கில் ஆஜராகுவதிலிருந்து விலக்கு அளிக்க சென்னை உயர்நீதிமன்றத்தில் சீமான் தொடுத்த மனு தள்ளுபடி செய்யபட்டதால் இன்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் விக்கிரவாண்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

மும்மொழிக்கொள்கை கடைபிடித்தால் தான் நிதி ஒதுக்குவோம் என்பது எப்படி ஜனநாயகமாக இருக்கும்.

மாநிலங்கள் கொடுக்கும் வரி வருவாயின் பெருக்கம் தான் மத்திய அரசின் நிதி. இது நாட்டின் பொதுவுடைமையாக இருக்கும் இறையாண்மைக்கு நேர் எதிர்மறையானது. இந்தியா ஒருமைப்பாடு மிக்க நாடாக இருக்க வேண்டும் என்றால் எல்லா மொழிகளுக்கும் இடமளிக்க வேண்டும்.

என்னுடைய பணத்தை எடுத்து வைத்துகொண்டு பணம் கொடுப்போம் என்பது திமிறு. இந்தி கட்டாயம் படிக்க வேண்டும் என்ற தேவை என்ன இருக்கிறது. இந்தி படித்தால் பசி, பட்டினி தீர்ந்துவிடுமா. மொழி வாரியாக தான் இந்தியா பிணைந்து இருப்பதாகவும், தாய் மொழி தமிழ் பயன்பாட்டு மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. எதனை வேண்டுமானாலும் படிப்பேன் என்பது எனது விருப்பம்.

வேறொரு மொழியை கற்க நாடோடி கூட்டமாக வாழ வைக்க நினைக்கிறீர்களா. நடிகர் சரத்குமார் அனைத்து மொழிகளும் பேசுகிறார். விரும்பினால் எந்த மொழி வேண்டுமானாலும் கற்போம்.

மரத்தின் வேர் வலுவாக இருக்க வேண்டும். இந்தியா ஒரு தேசம் என்பதும் ஒரு மொழி என்பதும் கொடுமையானது. அது தேவை என்றால் இந்தி கற்றுக்கொள்கிறோம். கட்டாயம் இந்தி படிக்க வேண்டும் என்றால் அதை செய்ய முடியாது. மும்மொழி க் கொள்கை மோசடி கொள்கை. கொள்கை மொழி அவரவர் தாய்மொழியில் தான் இருக்க வேண்டும். 3ம் வகுப்பில் பொதுத்தேர்வு வைக்க கூடாது. அப்படி அந்த தேர்வில் தோல்வி பெற்றால் பிஞ்சு மனதில் நஞ்சு வளராதா.

ஆட்சிக்கு வந்து 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம் என்றார்கள். அதை செய்யவில்லை. தமிழக அரசு கோழைகூடாரகூட்டமாக உள்ளது. ஆளும் கட்சியாக இருக்கும்போது வெல்கம் மோடி என்பார்கள். எதிர்கட்சியாக இருந்தால் கோ பேக் மோடி என்பார்கள்.

கல்வி மாநிலத்தின் உரிமை. மருத்துவ கல்லூரி, பொறியியல் கல்லூரி எத்தனை அமைக்க வேண்டும் என்ற உரிமையை மாநில அரசுக்கு கொடுக்க வேண்டும். இந்தி எதற்காக தேவை என்பதற்கு அண்ணாமலை காரணம் கூற வேண்டும். இந்தி படித்தால் தான் தேசப்பற்று என்றால் அது தேசதுரோகம். தமிழ் தான் பூர்வகுடி மக்கள். இந்தி தேவை என்றால் மட்டுமே கற்று கொள்வோம். அண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் குழந்தைகள் அரசு பள்ளியில் கல்வி பயில வில்லை என கூறுகிறார்.

தமிழகத்தில் மக்கள் பல்வேறு பிரச்சனைக்களாக போராடி வருகின்றனர். நல்லாட்சி கொடுக்கிறேன் என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு மனசாட்சி இருக்கிறதா. ஈரோடு இடைத்தேர்தலில் ஏன் முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் வந்து வாக்கு சேகரிக்கவில்லை. பாலியல் வன்கொடுமை, மயிலாடுதுறையில் கள்ளச்சாராயத்தை தடுத்த வாலிபர் கொலை செய்யப்பட்டுள்ளார். அப்பா என்னப்பா இப்படி பண்றீங்களே என்று கேட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு சீமான் கூறினார்.

## மேல்மா சிப்காட்டுக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு தெரிவித்த உழவர்களை தாக்கி, மிரட்டுவதா? ராமதாஸ் கண்டனம்

திருவண்ணாமலை, பிப்.20

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிப்காட் விரிவாக்கத்திற்காக நிலம் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் உழவர்களை திமுக நிர்வாகிகளைக் கொண்டு தாக்குவது, மிரட்டுவது உள்ளிட்ட செயல்களில் ஆளும்கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர். உயிராக மதிக்கும் நிலங்களை தர மறுக்கும் உழவர்களின் உணர்வுகளை மதிக்காமல் அவர்களை மிரட்டி நிலங்களைப் பறிக்க அரசு முயல்வது கண்டிக்கத்தக்கது என பாமக நிறுவனர் ராமதாஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:

செய்யாறு சிப்காட் வளாகத்தை விரிவுபடுத்துவதற்காக மேல்மா, தேத்துறை, இளநீர்குன்றம், குறும்பூர், நர்மாபள்ளம். அத்தி, வீரம்பாக்கம் உள்ளிட்ட 11 கிராமங்களில் உள்ள 2700 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், அதைக் கண்டித்து அந்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தொடர்ந்து 597ஆம் நாளாக இன்றும் மேல்மா கூட்டுச் சாலையில் காத்திருப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களின் எதிர்ப்பையும் மீறி நிலங்களை கையகப்படுத்தியே தீருவோம் என்று கூறி வரும் தமிழக அரசு அங்கு போராடி வரும் உழவர்கள் மீது குண்டர் சட்டத்தை பாய்ச்சியது, பொய்வழக்குகளை பதிவு செய்தது என எண்ணற்ற அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டு வருகிறது.

ஆனால் அதுமட்டுமின்றி, அதற்கு அடுத்த நாள் அண்ணாமலை என்ற விவசாயியை சந்திப்பதற்காக சென்ற ரேணுகோபால் என்ற உழவரை திமுகவைச் சேர்ந்த கருணாநிதியும், அவரது ஆட்களும் கொடூரமாகத் தாக்கியதுடன் அவரது கை விரல்களையும் கடித்து காயப்படுத்தியுள்ளனர்.

அதற்காக வந்தவாசி அரசு மருத்துவமனையில் மருத்துவம் பெற்று வரும் ரேணுகோபால், கருணாநிதி மீது அளித்த புகார் மீது எந்த நடவடிக்கையையும் காவல்துறை எடுக்கவில்லை. மாறாக, கருணாநிதியிடம் புகார் மனு பெற்று ரேணுகோபால் மீது வழக்குப் பதியும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். சுருக்கமாகக் கூற வேண்டுமானால். செய்யாறு சிப்காட் விரிவாக்கத்திற்கு நிலம் எடுக்க அங்குள்ள உழவர்கள் மீது அனைத்து வகையான அடக்குமுறைகளையும் அரசு ஏவி வருகிறது. அடக்குமுறை மூலம் பணிய வைக்க நினைத்தால் அரசுக்கு தோல்வியே கிடைக்கும்.



அதிகாரம் கைகளில் இருக்கிறது என்பதற்காக மக்களைத் தாக்கலாம், அச்சுறுத்தலாம், அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டு நிலங்களை பறிக்கலாம் என்று ஆட்சியாளர்கள் நினைக்கக் கூடாது. ஜனநாயகத்தில் அடக்குமுறை ஒரு போதும் வென்றது கிடையாது. ஆட்சியாளர்களிடம் உள்ள அதிகாரத்தை விட கூடுதல் சக்தி கொண்ட வாக்குரிமை என்ற அதிகாரம் மக்களிடம் உள்ளது. அதை அவர்கள் பயன்படுத்தினால் ஆட்சியாளர்கள் அனைவரும் காணாமல் போய்விடுவார்கள். இதற்கு பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

மேல்மா பகுதியில் உள்ள விளைநிலங்கள் வளம் மிக்கவை அவற்றை விட்டுக்கொடுக்க தயாராக இல்லை என்று உழவர்கள் கூறி விட்ட நிலையில் அந்தத் திட்டத்தை கைவிடுவது தான் அரசுக்கு அழகு. அதற்கு மாறாக உழவர்களை கைது செய்வது, தாக்குவது, அச்சுறுத்துவது போன்ற செயல்களில் ஆட்சியாளர்கள் ஈடுபடக் கூடாது.

ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக இந்த சிக்கல் நீடித்து வரும் நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த விவகாரத்தில் தலையிட்டு சுமூகத் தீர்வை கண்டிருக்க வேண்டும். ஆனால், அவரை சந்திக்க விரும்பும் உழவர்களைப் பார்ப்பதற்குக் கூட நேரம் தர மறுக்கிறார். இது நியாயமல்ல.

முந்தைய திமுக ஆட்சியின் போது சென்னை துணை நகரம். மின்சாரத் திட்டங்கள் என பல காரணங்களுக்காக பல்லாயிரக்கணக்கான நிலங்களை கையகப்படுத்த அரசு முடிவு செய்திருந்தது. திருப்போரூர், செய்யூர், இராணிப்பேட்டை. பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களைத் திரட்டி பா.ம.க. சார்பில் போராட்டம் நடத்திய நான். அனைத்து நிலங்களையும் மக்களுக்கு மீட்டெடுத்துக் கொடுத்தேன்.

தேவைப்பட்டால் மேல்மா பகுதி உழவர்களின் நிலங்களைக் காப்பதற்காகவும் நான் நேரடியாககளமிறங்கிபோராடத் தயங்க மாட்டேன். மேல்மா நிலங்களுக்காக மீண்டும் ஒரு போராட்டத்திற்கு தமிழக அரசு வழி வகுக்கக் கூடாது. அதற்கு முன்பாகவே நிலம் கையகப்படுத்தும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்.


என ராமதாஸ் கூறினார்.

## திருச்சி சூரியூரில் பிரமாண்டமான ஜல்லிக்கட்டு மைதானம் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

திருச்சி, பிப்.20

திருச்சிசூரியூரில்ஆண்டு தோறும் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது வழக்கம். திருச்சி மாவட்டத்தில் நடைபெறும் முதல் ஜல்லிக்கட்டு போட்டி என்பதால் இது மிகவும் புகழ்பெற்றதாகும்.

திருச்சி மட்டுமல்லாது புதுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், கரூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து மாடுகள் பெரிய சூரியூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும். இத்தகைய பிரசித்திபெற்ற சூரியூரில் ரூ.3 கோடியில் பிரமாண்டமான ஜல்லிக்கட்டு மைதானம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா நாளை(வியாழக்கிழமை) நடக்கிறது. விழாவில் துணை முதலமைச்சர் உதையநந்தி ஸ்டாலின் கலந்து கொண்டு ஜல்லிக்கட்டு மைதானத்துக்கு அடிக்கல் நாட்டுகிறார்.



இந்த மைதானம் ஜல்லிக்கட்டுக்கு மட்டுமல்லாமல், பல்வேறு விளையாட்டுகள் விளையாடும் வகையில் ஒருங்கிணைந்த விளையாட்டு திடலாக அமைய உள்ளது. கால் பந்து, வாலிபால் உள்ளிட்ட மற்ற விளையாட்டுகளையும் விளையாடும் வகையில் மைதானம் உருவாகிறது.

இந்த ஜல்லிக்கட்டு மைதானத்தில் வாடிவாசலுக்கு எதிர்புறம் மக்கள் அனைவரும் உட்காரும் வகையில் கட்டப்பட இருக்கிறது. மேலும் மக்கள் அனைவரும் பாதுகாப்பாக அமர்ந்து போட்டிகளை பார்க்கும் வகையில் அமைக்கப்பட இருக்கிறது.


அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு மைதானத்திற்கு அடுத்தப்படியாக 2வது ஜல்லிக்கட்டு மைதானமாக 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

## தமிழ்... தமிழ்... என்று பேசுபவர்கள் யாரும் தமிழுக்கு சேவையாற்றவில்லை ஆளுநர் ஆர்.என்.ரவி

சென்னை, பிப்.20

மகாகவி பாரதியாரின் இலக்கிய படைப்புகளை தொகுத்ததற்காக எழுத்தாளர் சீனி விஸ்வநாதனுக்கு மத்திய அரசு பத்ம ஸ்ரீ விருதை அறிவித்து கவுரவித்துள்ளது.

இந்நிலையில், சென்னை மயிலாப்பூரில் உள்ள பாரதிய வித்யா பவனில்சீனிவிஸ்வநாதனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்று உரையாற்றினார். அவர் பேசியதாவது:



பாரதியாரும் அவரது பணிகளும் நமக்கு எப்போதும் தேவை. தமிழகத்தில் உள்ள அனைவரும் பாரதியாரை தங்கள் தோள்களில் சுமக்க வேண்டும்.

தமிழகத்தில் ஒரு பல்கலைக்கழகத்தில் கூட பாரதியாருக்கு இருக்கை இல்லை. தமிழ்.. தமிழ்... என்று பேசுபவர்கள் யாரும் தமிழுக்கும், தமிழ் இலக்கணத்திற்கும் சேவையாற்றவில்லை.

பாரதம் ஒருங்கிணைந்த நாடு என்பதை ஏற்க மறுக்கும் கட்டமைப்பு இங்கே இருக்கிறது.

காஞ்சி காசி இடையே இருக்கும் ஒற்றுமையை பாரதியார் பேசினார். ஆனால், வடக்கு தெற்கு என்று இங்கே பிரித்து வைத்திருக்கிறார்கள். பாரதியார் வேதங்களை போற்றினார், இங்கு வேதங்களை வெறுப்பவர்கள் இருக்கிறார்கள்.

இம்மாநிலம்முழுவதும் சுற்றி இருக்கிறேன். மக்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள், ஆனால், அவர்களுக்கு வழிகாட்டுதல் தேவை என்று பேசினார்.

## வரதட்சணையாக 1 ரூபாயும், 1 தேங்காயும் ஏற்றுக்கொண்ட மணமகன்: மணமகள் வீட்டார் நெகிழ்ச்சி

ஜெய்பூர், பிப்.20

ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த ஒரு திருமணத்தின் போது, மணமகனுக்கு வரதட்சணையாக ரூ.5 லட்சத்து 50 ஆயிரம் பணம் ரொக்கமாக அளிக்கப்பட்டன. அதில் ஒரே 1 ரூபாயும் ஒரு தேங்காயையும் மட்டும் எடுத்துக் கொண்டு, மீதி பணத்தை மணமகள் வீட்டாரிடம் மணமகன் திருப்பி கொடுத்த சம்பவம் மணமகள் வீட்டாரிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்தவர் பரம்வீர் (வயது 33) என்பவர் நிகிதா பாடி (வயது 28) என்பவரை திருமணம் செய்து கொண்டார். கடந்த பிப்ரவரி 14 ஆம் தேதி இவர்களது திருமணம் நடந்த நிலையில், மணமகள் வீட்டார் சார்பில் 5 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக மணமகன் வீட்டாரிடம் வரதட்சணையாக கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த வரதட்சணை பணத்தை விரும்பாத மணமகன், அதில் இருந்து ஒரே ஒரு ரூபாயும், ஒரு தேங்காயும் எடுத்துக் கொண்டு, மீதி பணத்தை மணமகள் வீட்டாரிடம்திருப்பிகொடுத்து விட்டார்.

வரதட்சணை பணத்தை நீங்கள் கொடுக்க வந்த போது, இந்த சமூகத்தில் வரதட்சணை இருப்பதை எண்ணி வருத்தம் அடைந்தேன். இருப்பினும் நீங்கள் அன்பாக கொடுக்க முன் வந்ததை என்னால் நிராகரிக்கமுடியவில்லை. அதனால் நான் அந்த பணத்தில் இருந்து ஒரே ஒரு ரூபாய் மட்டும் எடுத்துக் கொள்கிறேன். படித்தவர்களே இதுபோன்ற செயலை செய்யாவிட்டால், வேறு யார் வந்து இதனை மாற்றுவார்கள். அனைவருக்கும் நாம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.



அவருடைய இந்த பதிலை கேட்டு, மணமகள் விட்டார் நெகிழ்ச்சி அடைந்தனர். திருமணத்தின் போது, வரதட்சணை வாங்கக்கூடாது என்று இன்றைய இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடந்த இந்த திருமணம், குறித்த செய்தி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு: மக்கள் நலத்திட்டங்கள் முன்னேற்றம் பெறுகிறது.



தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் வட்டத்தில் அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் சேவைகளின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் நேரில் ஆய்வு செய்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், இன்று 19.02.2025 பரங்குன்றாபுரம், அச்சன்குட்டம், கருவந்தா உள்ளிட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார். பரங்குன்றாபுரத்தில் ஆய்வு: 285 இலட்சம் மதிப்பீட்டில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின் முன்னேற்றம் அங்கன்வாடி மையம் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம், அடிப்படை வசதிகள் ஆய்வு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் கோப்புகளின் நிலை பார்வை இ.சேவை மையம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் ஆய்வு வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு அலுவலகம் ஆய்வு 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டடம் பார்வை அச்சன்குட்டம் ஆய்வு நியாய விலைக்கடை அரிசி, பாமாயில், பருப்பு, சீனி போன்ற பொருட்களின் தரம், இருப்பு ஆய்வு ஊராட்சி மன்ற அலுவலகம் கோப்புகள் பார்வை திடக்கழிவு மேலாண்மை திட்டம் பார்வை 15-வது நிதிக்குழு மானியத்திட்டம் 2024-2025 ₹36,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை ஆய்வு ஊரக வீடு பழுது பார்க்கும் திட்டம் பழுது பார்க்கப்பட்ட வீடுகள் பார்வை கருவந்தா சோலைசேரி கிராமம் ஆய்வு. T.DTA நடுநிலை பள்ளி – குழந்தைகளின் கல்வித்திறன், அடிப்படை வசதிகள் ஆய்வு மதிய உணவுத் திட்டம் உணவின் தரம், மாணவர்களின் வருகைப்பதிவு ஆய்வு பைப்லைன் அமைக்கும் பணிகள் பார்வை சார்பதிவாளர் அலுவலகம் – கோப்புகள் ஆய்வு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மருந்து இருப்புகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் ஆய்வு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்ட பிறகு, அனைத்து துறை அலுவலர்களுக்கும் திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கினார். மேலும், சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். ஆய்வில் பங்கேற்ற முக்கிய அதிகார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் S.அரவிந்த் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் அலுவலர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, லாவண்யா, சுடலைமணி, கல்யாண ராமசுப்பிரமணியன், அலிஸ் தாயம்மாள் மற்றும் பலர். இந்த ஆய்வு, மக்கள் நலத்திட்டங்கள் தடையின்றி செயல்படுவதை உறுதி செய்வதற்கான முக்கியமான நடவடிக்கையாக அமைந்துள்ளது.

# விழுப்புரம்: அத்தியூரில் பனையேற்ற கலப்படம் — விவசாயிகள் கண்டனம்



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் கானை ஒன்றியம் அத்தியூர் திருக்கையில் வெங்கடேசன் பனையேறி பணங்கள்ளில் கலப்படம் குறித்து தமிழ்நாடு பனையேறிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக நேரில் ஆய்வு கண்ட பொழுது கள் எமது உணவு கள் எமது உரிமை போராடும் ஒரு விவசாயி கள்ளில் கலப்படம் இருப்பதை கண்டித்து தமிழ்நாடு பணியாறிகள் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன் என்று எச்சரித்ததார் இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் சலசலப்புடன் காணப்பட்டது

# கவுண்டமணியின் ஒத்த ஓட்டு முத்தையா படம் எப்படி இருக்கிறது? விமர்சனம்




சாய் ராஜகோபால் இயக்கத்தில் கவுண்டமணி நடித்துள்ள படம் 'ஒத்த ஓட்டு முத்தையா'. இந்த படத்தில் யோகி பாபு, சித்ரா லட்சுமணன், சிங்கமுத்து மற்றும் மொட்டை ராஜேந்திரன் உள்ளிட்டவர்கள் நடித்திருகின்றனர். அரசியல் நகைச்சுவை கலந்து உருவாகியுள்ள இந்தத் திரைப்படத்தை சினி கிராப்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் ரவிராஜா தயாரித்துள்ளார். சித்தார்த் விபின் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், கவுண்டமணி நடித்துள்ள 'ஒத்த ஓட்டு முத்தையா' படம் எப்படி இருக்கிறது என்பதை காண்போம்.

அரசியல்வாதி கவுண்டமணி தேர்தலில் ஒரு ஓட்டு வாங்கி தோற்றதால் ஒத்த ஓட்டு முத்தையா என்று அழைக்கப்படுகிறார். மனைவி மற்றும் மூன்று தங்கைகளுடன் வசிக்கும் அவர் தனது தங்கைகளை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மாப்பிள்ளைகளுக்கே மணமுடித்துக் கொடுப்பேன் என்று பிடிவாதமாக இருக்கிறார். அவருடைய தங்கைகளோ வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களை காதலித்து அண்ணன் சம்மதத்தை பெற காதலர்களை ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக நடிக்கச் சொல்கிறார்கள்.

அந்த சமயத்தில் தேர்தல் அறிவிக்கப்பட கவுண்டமணிக்கு கட்சித் தலைமை சீட் கொடுக்காததால் சுயேச்சை வேட்பாளராக நிற்கிறார். தேர்தலில் அவர் வெற்றி பெற்றாரா? தங்கைகளை அவர்களின் காதலர்களுக்கு திருமணம் செய்து வைக்க சம்மதித்தாரா? என்பது மீதி கதை.

நீண்ட இடைவெளிக்கு பிறகு கவுண்டமணி மறுபிரவேசம் செய்து இருக்கிறார். அவருடைய டிரேட் மார்க் டைமிங்காமெடி, பஞ்ச்டயலாக், காட்சிகளுக்குஏற்ப முகபாவங்கள்என தன்னைபழைய கவுண்டமணியாகவே வெளிப்படுத்தி கதாபாத்திரத்துக்கு சிறப்பு செய்திருக்கிறார். முதுமையிலும் அவர் காண்பிக்கும் திரை ஆளுமை வியக்க வைக்கிறது.

யோகி பாபு ரசிகர்களை ஏமாற்றாமல் சிரிக்க வைக்கிறார். இளம் கதாநாயகர்களாக வரும் வாசன் கார்த்திக், அன்பு மயில்சாமி, கஜேஸ் நாகேஷ் ஆகியோர் ஆர்வத்தோடு நடித்து கதாபாத்திரத்துக்கு வலு சேர்த்துள்ளார்கள். சித்ரா லட்சுமணன், சிங்கமுத்து, வையாபுரி, ரவிமரியா, ஓ.ஏ.கே.சுந்தர், நான் கடவுள் ராஜேந்திரன், முத்துக்காளை, கூல் சுரேஷ், சென்ராயன், சாய் ராஜகோபால், மணவை பொன் மாணிக்கம் என அனைவரின் நடிப்பிலும் நேர்த்தி.

சித்தார்த்விபின்இசையில்பாடல்கள்கவனம்பெறுகிறது.பின்னணிஇசையும்பரவாயில்லை.ஒளிப்பதிவாளர் காத்தவராயன் காமெடி கதையை கண்களுக்கு குளிர்ச்சி தரும் விதத்தில் அழகாக படம் பிடித்துள்ளார். நாடகத்தனமான காட்சிகள் பலவீனம். லாஜிக் பார்க்காமல் காமெடி படம் கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் இயக்குனர் சாய் ராஜகோபால்.

# மகனுடன் சேர்ந்து விளையாட விருப்பம்: ஓய்வு முடிவை திரும்ப பெற்ற ஆப்கானிஸ்தான் வீரர்




ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரான முகமது நபி, எதிர்வரும் சாம்பியன்ஸ் டிராபி தொடருடன் சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். இவர் கடந்த 2019ம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் தற்போது ஆடி வருகிறார்.

இந்நிலையில் முகமது நபி தனது ஓய்வு முடிவை தற்போது திரும்ப பெற்றுள்ளார். ஆப்கானிஸ்தான் அணிக்காக சர்வதேச ஒருநாள் போட்டிகளில் தனது மகனுடன் சேர்ந்து விளையாட விருப்பம் ஏற்பட்டுள்ளதால் முடிவை மாற்றியுள்ளார்.

முகமது நபியின் மகனான ஹசன் ஐசாகில் (வயது 18) ஆப்கானிஸ்தான் அணிக்காக கடந்த ஜூனியர் உலகக்கோப்பையில் விளையாடினார். இதனால் அவர் விரைவில் ஆப்கானிஸ்தான் அணியில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் காரணமாக மகனுடன் சேர்ந்து விளையாடும் ஆசையால் நபி ஓய்வு முடிவை திரும்ப பெற்றுள்ளார்.

# ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.498 கோடி ஒதுக்கீடு

சென்னை, பிப்.20


தமிழகத்தில் கடந்த ஆண்டு ஃபெஞ்சல் புயல் காரணமாக விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் விவசாயிகள் பெரிதும் அவதியடைந்தனர்.

பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக, தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. இதற்கிடையே, டெல்டா மாவட்டங்களில் மத்திய குழுவினர் ஆய்வு செய்தனர்.

இந்நிலையில், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.498.8 கோடி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார். கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 18 மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.498.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரணம் வழங்குவதன் மூலம் 5,18,783 விவசாயிகள் பயன் பெறுவர்.

மானாவாரி பயிர் ஹெக்டேருக்கு ரூ.8,500, நெற்பயிர், பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு ரூ.17,000 நிவாரணம் வழங்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தர விட்டுள்ளார்.

# கோவையில் சிறுமி பாலியல் வன்கொடுமை: பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகம் மாறுவதைத் தடுக்க வேண்டும் அன்புமணி



கோவை, பிப்.20

கோவையில் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் 7 பேர் சேர்ந்து 17 வயது சிறுமியை விடுதி அறைக்கு வரவழைத்து, கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்தனர். இது தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் பெருகி வருவதும், அதைத் தடுக்க காவல் துறை நடவடிக்கை எடுக்காததும் கடுமையாக கண்டிக்கத்தக்கது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,


கோவையில் தனியார் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் 7 பேர் சேர்ந்து 17 வயது சிறுமியை விடுதி அறைக்கு வரவழைத்து, கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்திருக்கின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. தமிழ்நாட்டில் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் பெருகி வருவதும், அதைத் தடுக்க காவல் துறை நடவடிக்கை எடுக்காததும் கடுமையாக கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் கஞ்சா வணிகம் தடையின்றி நடைபெறுகிறது. கஞ்சா உள்ளிட்ட அனைத்துப் போதைப் பொருட்களுக்கும் அடிமையாகிவிட்ட இளையசமுதாயம், கொடுரமான குற்றங்களைக்கூட எந்தவித குற்ற உணர்ச்சியும் இல்லாமல் மிகவும் சாதாரணமாக செய்யும் மனநிலைக்கு வந்திருக்கிறது. இன்னொருபுறம் தமிழ்நாட்டில் எந்தக் குற்றங்களை வேண்டுமானாலும் செய்துவிட்டு, தண்டனையில்லாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சூழல் தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருகுவதற்குக் காரணமாகும். தமிழக அரசு, காவல் துறை ஆகியவற்றின் தோல்வியையே இக்கொடிய நிகழ்வு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் குற்றங்கள் பெருகுவதற்கு கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம்தான் காரணம் என்பதால், அதன் புழக்கத்தைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக நான் வலியுறுத்தி வருகிறேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நான் நேரில் சந்தித்தும் இதை வலியுறுத்தியுள்ளேன். ஆனால், நாளுக்கு நாள் போதைப் பொருள் நடமாட்டம் அதிகரித்து வருகிறதே தவிர குறையவில்லை.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பெருகிவரும் வேகத்தைப் பார்த்தால், பெண்கள் சுதந்திரமாக நடமாட முடியுமா? பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் குழந்தைகளை அச்சமின்றி அனுப்பி வைக்க முடியுமா? என்ற ஐயம் எழுகிறது. மக்கள் மத்தியில் நிலவும் இந்த ஐயமும், அச்சமும் போக்கப்படவில்லை என்றால், பெண் கல்வி பாதிக்கப்படுவது உட்பட மோசமான விளைவுகள் ஏற்படும். அத்தகைய விளைவுகள் ஏற்படுவதை தடுக்க வேண்டியது காவல்துறையின் கடமை ஆகும். கோவையில் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த கல்லூரி மாணவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் கஞ்சா விற்பனை நடைபெறவில்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். காவல்துறையில் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவை வலுப்படுத்தி, போதைப் பொருள் நடமாட்டத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அறிக்கையில் அன்புமணி தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விளம்பர மோகத்தில் இருக்கும் ஸ்டாலின் அரசுக்கு கண்டனம் எடப்பாடி பழனிசாமி



சென்னை, பிப்.20

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மந்திரி அன்னபூர்ணா தேவிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டில் அனைத்து நலத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்களிப்பு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான நேர்வுகளில், ஒன்றிய அரசின் நிதிப்பங்கு காலாண்டின் இறுதியிலோ அல்லது அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டிலோ மட்டுமே வழங்கப்படுகிறது.

நிதியாண்டின் முடிவிற்குள் ஒன்றிய அரசு ஒதுக்கும் தொகையை மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்குக் குறுகிய காலத்திற்குள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது.

பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PM MVY) என்னும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 304 கோடி ரூபாயில், ஒன்றிய அரசின் பங்குத் தொகையான 184 கோடி ரூபாய் இதுநாள் வரை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதனால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் உரிய காலத்தில் வரவு வைக்க இயலாமல் உள்ளது.

இன்றைய தேதியில், ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (Single Nodal Agency) கணக்குகளில் உள்ள 576.22 கோடி ரூபாயில் இந்த நிதியாண்டு முடிவதற்குள் ரூ.482.80 கோடி பயன்படுத்தப்படும் என்றும், மீதமுள்ள தொகை ஒன்றிய அரசின் பங்காக அடுத்த நிதியாண்டுக்குக் கொண்டு செல்லப்படும்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான பங்குத்தொகையை, குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது அந்தந்த நிதியாண்டுக்குள்ளேயே விடுவித்திட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# கோவையில் 17 வயது சிறுமியை சிறைவைத்து பாலியல் வன்கொடுமை 7 கல்லூரி மாணவர்கள் போக்சோ சட்டத்தில் கைது



கோவை, பிப்.20

கோவை உக்கடம் பகுதியைச் சேர்ந்தவர் 17 வயது சிறுமி. இவர் பிளஸ்2 தேர்வு எழுதியதில் தேர்ச்சி பெறாததால் அடுத்து படிப்பை தொடராமல் வீட்டிலேயே இருந்து வந்தார். இவரது பெற்றோர் வெளியூரில் உள்ளனர். இங்கு தனது பாட்டி பராமரிப்பில் இருந்து வருகிறார்.

சிறுமி, செல்போனில் சமூக வலைதளங்களை பயன்படுத்தி வந்தார். வலைதளத்தில் மூழ்கி கிடந்த அவருக்கு குனியமுத்தூர் பகுதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் பழக்கம் ஆனார். அந்த மாணவர் வெளிமாவட்டத்தைச்சேர்ந்தவர். இங்கு தங்கியிருந்து கல்லூரியில் படித்து வந்தார்.

சிறுமியும், அந்த மாணவரும் அடிக்கடி போனில் பேசியும், சமூக வலைதளங்கள் மூலமும் பேசி வந்தனர். அந்த மாணவர், மாணவியை அடைய திட்டமிட்டு நேரம் பார்த்து காத்திருந்தார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அந்த மாணவியை அவர் தொடர்பு கொண்டுள்ளார்.

குனியமுத்தூர் பகுதியில் தான் தங்கியிருக்கும் அறைக்கு வருமாறும், அங்கு தனியாக பேசலாம் என கூறி அழைத்துள்ளார்.

அந்த பெண்ணும், மாணவரை நம்பி வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றார். தனது பாட்டியிடம் வெளியில் செல்வதாகவும், உடனே திரும்பி விடுவதாகவும் கூறி விட்டு புறப்பட்டார். ஆனால் வெகுநேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இரவை கடந்தும் அந்த பெண் வீடு திரும்பாததால் அதிர்ச்சி அடைந்த பாட்டி உக்கடம் போலீஸ்நிலையம் சென்று புகார் செய்தார். போலீசார் அந்த பெண்ணை தேடி வந்தனர்.

இந்தநிலையில் அந்த பெண் வீடு திரும்பினார். அவரிடம் பாட்டியும், போலீசாரும் துருவி, துருவி விசாரித்தனர். அப்போது திடுக்கிடும் தகவலை அந்த பெண் தெரிவித்தார்.

குனியமுத்தூரில் கல்லூரி மாணவர் தங்கியிருந்த அறைக்கு அந்த பெண் சென்றுள்ளார். அங்கு அந்த பெண்ணிடம் மாணவர் ஆசைவார்த்தைகள் கூறி இருக்கிறார். பின்னர் பெண்ணை நிர்வாணப்படுத்தி அவர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.

அதன்பின் மாணவருடன் படித்த மேலும் 6 [illegible] துள்ளனர். அவர்களும் ஒருவர் பின் ஒருவராக அந்த பெண்ணை கற்பழித்துள்ளனர். அங்குள்ள அறையில் அந்த பெண்ணை சிறைவைத்து இரவு விடிய, விடிய 7 பேரும் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர்.

பின்னர் காலையில் அந்த பெண்ணை வீட்டருகே கொண்டு வந்து விட்டு விட்டு 7 பேரும் தப்பிச் சென்றது தெரியவந்தது.

அந்த பெண் அளித்த தகவலின் பேரில் கல்லூரி மாணவர்கள் 7 பேரையும் பிடித்து போலீசார் விசாரித்தனர். விசாரணையில் சிறுமியை சிறைவைத்து 7 பேரும் பலாத்காரம் செய்தது உறுதியானது.

இதையடுத்து 7 பேர் மீதும் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு போலீசார் கைது செய்தனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066